<u>தமிழ்நாடு மின்சார வாரியம்</u>

<u>செய்திக் குறிப்பு</u>

# 6000 ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரப்படுத்துதல்

## மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களது 87—வது பிறந்த நாளை ஒட்டி 6000 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு தமிழக அரசின் பரிசு

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இயக்கம் 39 பகிர்மான வட்டங்களாக பிரிக்கப்பட்டு அவை மேற்பார்வை பொறியாளர்களின் கீழ் இயங்கி வருகிறது. அவை 9 பகிர்மான மண்டலங்களாக அமைக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் ஒரு தலைமைப் பொறியாளர் கீழ் செயல்பட்டு வருகின்றது. இவற்றின் மூலம் மின் வாரியத்தின் அனைத்து செயல்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு மின் நுகர்வோருக்கு வாரியத்தின் சேவை அளிக்கப்படுகின்றது. 1995—96—ஆம் ஆண்டு வரை மின் வாரிய தேவையின் அடிப்படையில் ஒப்பந்தத் தொழிலாளர்களை வாரிய பணிக்கு உபயோகப்படுத்தி வந்தது. 5.1.1998 அன்று 21,600 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மின் வாரியத்தில் பணிபுரிந்து வந்தார்கள்.

..2...

2) இந்த ஒப்பந்தத் தொழிலாளர்களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அமர்த்துவது, வாரியத்தின் திறமைக்கும் செயல்பாட்டிற்கும் உகந்தது அல்ல என்று கருதியதாலும், தொழிலாளர்களின் எதிர்கால நலத்திற்கும் ஏற்றதல்ல என்பதாலும், பல்வேறு தொழிற்சங்கங்களும் அலுவலர் சங்கங்களும் வாரியத்தையும் தமிழக அரசையும் அவர்களது பணியினை நிரந்தரமாக்க வேண்டி கேட்டுக்கொண்டன. தமிழ் நாடு மின்சார வாரியத்திலும் உள் ஆய்வு செய்ததில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் தற்காலிகமாகவே தொடர்ந்து பணியாற்றி வருவதால் அவர்களது உற்சாகம் குறைவான அளவில் இருந்ததே, அவர்களது பணித்திறன் மேம்பாடு அடையாமல் இருப்பதற்கு காரணம் என்று அறிந்தது.

3) தமிழ் நாடு மின்சார வாரியத்தின் முன் மொழிவின் அடிப்படையில் தமிழக அரசு இதனை ஆராய்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாரியத்தின் பொன் விழா

கொண்டாட்டத்தின்போது (2.7.2007) வாரியத்தின் ஒப்பந்தத் தொழிலாளர்கள் அனைவரும் நிரந்தரப்படுத்துவார்கள் என்று அறிவித்தார்கள். இந்த அறிவிப்பினை தொடர்ந்து மின் வாரியம் தொழிற் சங்கங்களுடன், 1947 தொழிற் தகராறு சட்டத்தின்கீழ் வரலாற்று சிறப்பு மிக்க ஒப்பந்தத்தினை ஏற்படுதத்தி **21,600** ஒப்பந்தத் தொழிலாளர்களை படிப்படியாக நிரந்தரப்படுத்த முடிவு செய்தது.

அ) மேற்கூறிய முடிவின் அடிப்படையில் முதல் கட்டமாக **6000** ஒப்பந்தத் தொழிலாளர்கள் மஸ்தூர், கணக்கீட்டாளர் இரண்டாம் நிலை, கள உதவியாளர்-மின் அளவு எடுப்பவர் என்று அவர்களது கல்வித் தகுதியை அடிப்படையாக வைத்து செப்டம்பர் 2007 அன்றும், இரண்டாம் கட்டமாக **3.6.2009** அன்று **6000** தற்காலிக தினக் கூலித் தொழிலாளர்கள் காலமுறை ஊதியத்திலும் மின் வாரியம் பணி நியமனம் செய்தது.

ஆ) மேற்கண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், மூன்றாம் கட்டமாக **5995** தற்காலிக தினக்கூலித் தொழிலாளர்கள் 3.6.2010 முதல் நிரந்தரப்படுத்திட உத்தரவு வழங்கப்பட உள்ளது.

**4)** மேற்கண்ட வாரியத்தின் முடிவால் வாரியத்திற்கு ஆண்டுக்கு சுமார் ரூபாய் **65 கோடி** அதிகப்படியாக செலவாகும்.

Note:

The Press release may be widely communicated to the field

2/6
CS/TNEWS